உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# விசுவாசம்

## பாடம் - 6



## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் : # 6

# விசுவாசம்

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று நாம் தியானிக்க இருக்கும் பாடத்தின் தலைப்பு விசுவாசம் ஆகும்.



விசுவாசம் என்பது ஒவ்வொருவரும், அவரவருடைய அன்றாட வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக ஒருவர் சூரியன் உதிக்கும் என்று விசுவாசிக்கிறார். ஒருமாதம் வேலை செய்து அந்த மாதத்தின் முடிவில் ஊதியம் கிடைக்கும் என்று ஒருவர் விசுவாசிக்கிறார். வேறொருவர், வங்கியில் செலுத்திய பணம் பத்திரமாக இருக்கும் என்று விசுவாசிக்கிறார்.



**அப்படியே ஆன்மீகத்திலும்....**

**இந்து மதத்தை**

சேர்ந்தவருக்கு அவருடைய விக்கிரகங்கள், பூஜைகள் மற்றும் அன்றாட சடங்குகள் மேல் விசுவாசம் உண்டு. மேலும், பசு புனிதமான ஜீவன் என்றும், அதனுடைய சிறு நீர் பவித்திரமானது என்றும் விசுவாசிக்கிறார்கள்.



அது போலவே,
**இஸ்லாமியர்களும்**,
ஒருவிதமான நறுமணத் தூளை நீரில்
கலந்து குளிப்பதினால், தீய
சக்திகளிடமிருந்து பாதுகாப்பு
கிடைக்கும் என்று விசுவாசிக்கிறார்கள்.
**இது அவர்களுடைய**
**விசுவாசமாயிருக்கிறது !**



**புத்த மதத்தை** சேர்ந்த
ஒருவர், மறுஜென்மத்தில்
விசுவாசம் வைக்கிறார்.
அதன்படி அவர் மரித்தாலும்
மீண்டும் இந்த உலகத்தில்
பிறப்போம் என்று
விசுவாசிக்கிறார். இவ்வாறு
முக்தி அடைவதை, “நிர்வாணா”
என்று அழைக்கிறார்கள். (மறு
ஜென்மத்திலிருந்து விடுதலை)
**இது அவர்களுடைய**
**விசுவாசமாயிருக்கிறது !**



கிறிஸ்தவர்களில் **ரோம**
**திருச்சபையை** சேர்ந்தவர்கள்,
**“வேளாங்கண்ணி ஆலயத்தை”**
தரிசித்து, வழிபட்டு அன்னை மரியாளிடம்
ஜெபித்து, அங்குள்ள ஜெபமாலைகள்,
புனித தீர்த்தம், இன்னும் அநேக
காரியங்களை வாங்கி செல்லுவதின்
மூலம் பாதுகாப்புடன் இருப்பதாகவும்,
அவர்களுடைய ஜெபங்கள் கேட்கப்பட்டு

வாழ்க்கையில் இருக்கும் பிரச்சனைகள் முடிவடையும் என்றும் விசுவாசிக்கிறார்கள்.

**இது அவர்களுடைய விசுவாசமாயிருக்கிறது !**



அதுபோலவே, **பெந்தெகொஸ்தே சபையைச்** சேர்ந்த கிறிஸ்தவர்கள், அந்நிய பாஷைகளை பேசுவதிலும், அடையாள அற்புதங்களிலும், பரிசுத்த ஆவியை மகிமைப்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்துகிறார்கள்.

**இது அவர்களுடைய விசுவாசமாயிருக்கிறது !**

**இப்படியாக இந்த உலகத்தில் விசுவாசத்திற்கு அநேக உதாரணங்கள் கூறலாம்.**



இப்பொழுது நாம் ஒரு கேள்விக்கு வருவோம்.

**உண்மையில், விசுவாசம் என்பதன் பொருள் என்ன?**

இதை குறித்து, வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்பொழுது,

**எபிரெயர் 11:1**

**"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது"**

அதாவது, காணக்கூடாத காரியங்களை முழு உறுதியோடு நம்புவதே விசுவாசம் என்பதாகும்.

**உதாரணம் - கடவுள்.**

கடவுளை நாம் யாரும் பார்த்ததில்லை, ஆனாலும் இருக்கிறார் என்று நம்புகிறோம். நாம் கண்ணால் பார்ப்பது விசுவாசம் அல்ல, மாறாக நாம் மனதில் நம்புவது விசுவாசமாகும். இப்படியாக விசுவாசத்தை நாம் **மூன்று வகையாகப்** பிரிக்கலாம்.

## 1.இரட்சிப்பின் விசுவாசம்

இது பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலை பெறுவதற்கு எல்லா ஜனங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள இரட்சிப்பு பற்றின விசுவாசமாகும். அதை வேதாகமத்தில் நாம் பார்க்கலாம்.

**யோவான் 3:16**

**“தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.”**

## 2.அனுதின விசுவாசம்

இது நம்முடைய அன்றாட பாதுகாப்பு, வழி நடத்துதல் மற்றும் தேவைகளும் நிறைவேற்றப்படும் என்கிற விசுவாசம், அதை நம்முடைய வேதாகமத்தில் நாம் பார்க்கலாம்.

**மத்தேயு 6:11**

**“எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.”**

## 3.உபதேச அடிப்படையிலான விசுவாசம்

ஒவ்வொரு மதத்திலும் **உபதேசத்தின் அடிப்படையிலான** விசுவாசம் அநேகம் உள்ளது இதில் கிறிஸ்தவர்களும் உபதேசங்களின் அடிப்படையிலான விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

**இப்படி மூன்று விதமான விசுவாசங்கள் அனைத்து ஜனங்களுடைய அன்றாட வாழ்க்கையில் இருப்பதை நாம் காண்கிறோம்.**


இப்பொழுது நாம் இவைகளிலிருந்து வேறுபட்ட அதே சமயத்தில் விசேஷமான விசுவாசத்தைப் பற்றி பார்ப்போம். இது வேதாகமத்தில் யூதாவின் புத்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது.

## யூதா 20

**"நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு..."**

ஆம், இங்கு **"மகா பரிசுத்தமான விசுவாசம்"** என்று குறிக்கப்பட்டிருப்பதை காண்கிறோம்.

**நாம் இதை குறித்து எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறோமா?**



இங்கு கூறப்பட்டுள்ள **"மகா பரிசுத்தமான விசுவாசம்" என்பது எதைக்குறிக்கிறது?**

**மேலும், அதை "உறுதிப்படுத்துவது" என்பதன் பொருள் என்ன?**

முதலில், இது யாருக்காக கொடுக்கப்பட்டது என்று பார்க்கும் பொழுது....

## யூதா 3

**"பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று..."**

இந்த **"மகா பரிசுத்தமான விசுவாசம்"** என்பது "பரிசுத்தவான்களுக்கு" இயேசு கிறிஸ்துவால் ஒப்புவிக்கப்பட்டது என்று அறிகிறோம்.

மேலும் இது எவ்வாறு என்று கீழுள்ள வசனத்தில் வாசிக்கிறோம்.

## யோவான் 1:17

**"....கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின."**

ஆம், மகா பரிசுத்தமான விசுவாசம் என்பது **"கிருபையும், சத்தியமும்"** என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் இயேசுவின் மூலமாக **"கிருபையும் சத்தியமும்"** வந்ததைக் குறித்து வசனங்களை வாசிக்கலாம்...



## எபிரெயர் 1:2

**“இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்”**

ஆக, இயேசுவின் மூலமாக நமக்கு கிடைத்த “கிருபையும் சத்தியமும்” தேவனுடைய வார்த்தைகளே.

இவர் பிதாவின் வார்த்தைகளையே பேசினார் என்று நாம் கீழுள்ள வசனத்தை வாசித்து அறிந்து கொள்ளலாம்.

## யோவான் 3:34

**“தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளை பேசுகிறார்...”**

ஆம், இயேசு பேசின வார்த்தைகள் தேவனுடையதே என்று தெளிவாகத் தெரிகிறது.

ஆகிலும், அந்த கிருபையும், சத்தியமும், என்ன என்று ஆராயும்பொழுது....

## யோவான் 17:17

“**....உம்முடைய வசனமே சத்தியம்....**”




அதன்படி, தேவனுடைய வசனங்களே சத்தியமாக இருக்கிறது என்றும், இந்த சத்தியத்தையே இயேசு சீடர்களுக்கு போதித்தார் என்றும், இந்த சத்தியத்தின் அல்லது வசனத்தின் அடிப்படையில் கொண்ட விசுவாசமே மகா பரிசுத்தமான விசுவாசம் என்றும் அறிகிறோம்.

**ஆகவே, வேதாகமத்தில் எழுதியிருக்கிறபடி தேவனுடைய வார்த்தைகள் அல்லது சத்தியங்கள் மேல் வைக்கக்கூடிய விசுவாசமே மகா பரிசுத்த விசுவாசம் ஆகும்.**

ஆனால், உலகில் இன்று குறைவானவர்களே சத்தியத்தை ஆர்வத்துடன் தேடுகிறார்கள். மேலும், அநேகர் சத்தியம் என்று **வேற்றுமையான போதனைகளை** போதிக்கிறார்கள்.







ஆனால், “**இதுவே சத்தியம்**” என்கிற மெல்லியதான சத்தம் தேவனுடைய வார்த்தையின் மூலம் மாத்திரமே உணரப்படும்.

**இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?**

**அதாவது, நீங்கள் வேதாகமத்தை சத்தியம் என்று விசுவாசிக்கிறீர்களா?**

இன்று அநேகருக்கு வேதத்தின் மேல் முழு நம்பிக்கையும் விசுவாசமும் இருப்பதில்லை.



கிறிஸ்தவர்கள் மத்தியில் அநேகருக்கு வேதாகமத்தில் உள்ள புத்தகங்களைப் பற்றிய அறிவும் இல்லை. (வேதத்தின் புத்தகங்களாகிய எஸ்தர், எஸ்றா, தீத்துவை பற்றி அவர்கள் அறியாதிருக்கிறார்கள். இவைகள் வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் வருகிறதா, அல்லது பழைய ஏற்பாட்டில் வருகிறதா என்றும் கூட தெரிவதில்லை)

ஆனால், தேவனுடைய வார்த்தைகள் வேதாகமத்தில் உள்ளது என்று விசுவாசிக்கக்கூடிய ஜனங்களுக்கு தேவன் தம்முடைய வார்த்தைகளை எவ்வளவு அழகாக வெளிப்படுத்துகிறார் என்பதை கீழ்க்கண்ட வசனத்தில் அறியலாம்.

**எபிரெயர் 1:1,2**

**"பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்;...."**



**ஆம், இதுவே தேவன் தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்தின முறையாகும்.**

**"பூர்வ காலம்"** இது பழைய ஏற்பாட்டின் காலத்தைக் குறிக்கிறது.

**"பங்குபங்காக"** இது பழைய ஏற்பாடு எழுதுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 1600 வருடங்களைக் குறிக்கிறது.

**"வகை வகையாக"** இது தீர்க்கதரிசிகள் மற்றும், தூதர்கள் மூலமாக சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களும், அடையாளங்களும், நிழல்களுமாகும்.

**"கடைசி நாட்கள்"** இது புதிய ஏற்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தைக் குறிக்கிறது. இது யூத யுகத்தின் கடைசியான 100 வருடங்கள் நீடித்திருந்தது.

**"அவருடைய குமாரன்"** இது இயேசு அவருடைய 12 அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தி அவர்கள் நமக்காக எழுதி வைத்த அவருடைய வார்த்தைகளாகும்.

**இவ்விதமாக தேவனுடைய வார்த்தைகள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது.**

**பழைய ஏற்பாடு 39 புத்தகங்கள்** **புதிய ஏற்பாடு 27 புத்தகங்கள்**

**மொத்த புத்தகங்கள் 66 புத்தகங்கள்**

இப்படி இந்த 66 புத்தகங்கள் மூலமாக தேவனுடைய வார்த்தைகள் சத்தியமாக வெளிப்படுத்தப்படுகிறது.




**இந்த 66 புத்தகங்களே தேவனிடத்திலிருந்து முழுமையாக வெளிப்படுத்தப்பட்டதாகும். இது ஆதியாகமத்தில் தொடங்கி, வெளிப்படுத்தின விசேஷத்தில் முடிவு பெறுகிறது.**




இதை கீழ்வரும் வசனத்தின் மூலம் உறுதிப்படுத்தலாம்.

**வெளி. 22:18**

**“ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார்.”**

ஆம், இது தேவனுடைய வார்த்தைகளில் கூட்டுபவர்களுக்கும், குறைப்பவர்களுக்கும் எச்சரிப்பாக தேவன் கொடுத்த கட்டளையாக இருக்கிறது.

மேலும், சில கிறிஸ்தவர்கள் நினைப்பது போல் வேதாகமத்தில் சேர்க்க வேண்டிய புத்தகங்கள் என்று வேறெதுவுமில்லை. இதைப்பற்றி,

**உபாகமம் 12:32**

**“நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு, நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.”**



ஆம், இது தேவனுடைய வார்த்தைகளில் கூட்டவும், குறைக்கவும் கூடாது என்பதற்கான மற்றுமொரு கட்டளையாகும்.

## நீதிமொழிகள் 30:6

**"அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்."**

இங்கு தேவனுடைய வார்த்தைகளை கூட்டுகிறவனுக்கு தேவனிடமிருந்து மீண்டும் ஒரு கடுமையான எச்சரிப்பை காண்கிறோம்.

இதன்மூலம், தேவன் தம்முடைய வார்த்தைகள் எவ்விதத்திலும் மாறிவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமுள்ளவராக இருக்கிறார் என்பது தெளிவாகிறது.

இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலும், கீழுள்ள வசனத்தில் குறிப்பிடுகிறார்.



## அப்போஸ்தலர் 20:26

**"தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே...."**

**"எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே"**

என்று பவுல் குறிப்பிடுகிறார்.

ஆம், தேவனுடைய வார்த்தைகள் நாம் மனிதர்களை பிரியப்படுத்தும்படிக்கு தேர்வு செய்து போதிக்காமல் தேவனை பிரியப்படுத்தும்படிக்கு அவர் சொல்லிய வார்த்தைகளை உள்ளபடி போதிப்பதற்காக இருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட கண்டிப்பான கட்டளைகள் இருக்கிறபடியால் நமக்குள் எழுகிற கேள்வி என்னவெனில்,

**நம் கையில் வைத்திருக்கும் வேதாகமத்தில் வசனங்கள் சேர்க்கப்படுவதும் எடுக்கப்படுவதும் தவிர்க்கப்பட்டுள்ளதா?... என்பதே!**

இந்தக் கேள்விக்கான பதில் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாக.....
**இல்லை** என்பதே!

நம்முடைய வேதாகமத்தில் இரண்டு பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று ***"NIV"*** மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. நம்முடைய கையில் இருக்கும் வேதாகமம் **"கைப் பிரதிகளில்"** இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## "கைப்பிரதி" என்றால் என்ன?



அச்சு எந்திரங்கள் கண்டுபிடிக்கும் முன்பு வேதாகமத்தை ஆடு, மாடுகளின் தோல்களில் கையால் எழுதினார்கள். இவைகளை "தோல் சுருள்" என்று அழைத்தார்கள்.

இவை அன்றாட உபயோகத்தின் மூலம் சுமார் 50-60 வருடங்களுக்கு பின்பு பழையதாகிவிடும். ஆகவே, முழு வேதாகமத்தையும் மீண்டுமாக எழுத வேண்டியது அவசியமாக இருந்தது.

## சிந்தித்து பாருங்கள், எத்தனை உழைப்பு....

இப்படியாக, வேதாகமம் 1400 வருடங்களுக்குள் பலமுறை எழுதப்பட்டு இருக்கிறது. இப்படி கைகளால் எழுதப்பட்டிருக்கும் பிரதிகள் "கைப்பிரதிகள்" என்று அழைக்கப்பட்டது.



இதை சுருக்கமாக ***"MSS"*** **(மூலப்பிரதிகள்)** என்று அழைத்தார்கள்.

**எடுத்துக்காட்டாக "Syriac MSS", "Vatican MSS" etc.**

நம் கையில் இருக்கும் வேதாகமம்,

**KING JAMES VERSION (KJV)**

**ஆகும்**



1611 ஆம் வருடத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

இது 16 ஆம் நூற்றாண்டின் கைப்பிரதிகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது.



1940 ஆம் வருடத்தில் **சவக்கடலுக்கு** அருகே உள்ள **கும்ரான்** உப்புக்குகைகளில் சில பிரதிகள் இருந்தது.

இது இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட தோல் சுருள்கள் என கண்டுபிடிக்கப்பட்டது.

**சுமார் 1500 வருடங்களுக்கு மேலாக இந்த தோல் சுருள்கள் உப்பால் பதப்படுத்தப்பட்டு அற்புதமாக பாதுகாக்கப்பட்டிருந்திருக்கிறது.**

இந்த கைப்பிரதிகளிலிருந்து, ஆங்கிலத்தில் அழைக்கப்படும்

**"NEW INTERNATIONAL VERSION" (NIV)**

என்ற ஆங்கில வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டது.

இந்த மொழிபெயர்ப்பின் மூலமாக அநேக **வார்த்தைகள், வசனங்கள்,** வேதாகமம் எழுதினதிற்கு பின்பு சேர்க்கப்பட்டிருப்பதை கண்டுபிடித்தார்கள்.

அப்படி வேதாகமத்தில் சேர்க்கப்பட்ட இரண்டு பெரிய பகுதிகள் எவை என்றால் –

**மாற்கு 16:9-20; யோவான் 7:53-8:11**

(NIV) மொழிபெயர்ப்பின் ஒவ்வொரு பக்கத்தின் கீழுள்ள குறிப்புகளில் இந்த உவமைகள் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, தேவனுடைய வார்த்தைகளை படிப்பதில் நாம் மிக கவனமாக இருக்கவேண்டும். அநேக மொழிபெயர்ப்புகளை, வெவ்வேறு மொழிகளில் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

**1.KING JAMES VERSION (KJV)**
**2.NEW INTERNATIONAL VERSION (NIV)**

ஆகவே, தேவனுடைய வார்த்தைகளை துல்லியமாக அறிந்துகொள்வது மிக அவசியமானது.

அப்படியாக, தேவனுடைய உண்மையான வார்த்தைகளின் மேலும் அதனுடைய வெளிப்பாடுகளின் மேலும் இருக்கும் நம்முடைய விசுவாசமே...

## மகா பரிசுத்தமான விசுவாசம்

ஆதிகால சபைகளில், அவர்கள் விசுவாசித்த அனைத்து

சத்தியங்களும் வேதாகமத்தில் இருந்ததா என்று ஆராய்ந்து பார்ப்பதில் மிக கவனம் உள்ளவர்களாக இருந்தார்கள். இதைக்குறித்து நாம் பெரோயா பட்டணத்தாரைப் பற்றி வாசிக்கும்போது,

**அப்போஸ்தலர் 17:11**

**"அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்."**



இந்தப்பட்டணத்தார் பவுல் மூலமாக கேட்ட ஒவ்வொரு சத்தியங்களையும் வேதத்தில் உள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தார்கள். இவர்களைக்குறித்து அப்போஸ்தலராகிய பவுல், "நற்குணசாலிகள்" என்று குறிப்பிடுகிறார். நாமும் இந்த பெரோயா பட்டணத்தாரைப்போல மகா பரிசுத்தமான விசுவாசத்தில் நிலைத்து தேவனுக்குப் பிரியமாக இருப்போம்.

**நமக்கு எப்படிப்பட்ட விசுவாசம் இருக்கிறது?**

**இது வெறும் விசுவாசமா ? அல்லது "மகா பரிசுத்தமான விசுவாசமா"?**

**இந்தக் கேள்விக்கான பதில் முக்கியத்துவம் வாய்ந்ததா?**

ஆம், முக்கியத்துவம் வாய்ந்ததுதான் ஏனென்றால், நாம் தேவனுடைய வார்த்தைகளில் வாசிக்கிறபடி

**"உமது வசனமே சத்தியம்"**

மேலும், விசுவாசமானது, தேவனுடைய வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டிராவிட்டால் அது அசத்தியம் ஆகும். அல்லது தேவனுடையதாக இருக்காது. இதைக் குறித்து வேத வசனங்களை வாசிப்போம் –

## 1 தீமோத்தேயு 4:1

**"...பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்."**

ஆம், வேத வார்த்தைகளின்படி கொண்டிராத விசுவாசம் சாத்தானுடையதாக இருக்கிறது. அவனைப்பற்றி நாம் வாசிக்கும்போது...

## யோவான் 8:44

**"....அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான், சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை, அவன் பொய்யனும் பொய்க்குப்பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்."**

ஆகவே, நம்முடைய நம்பிக்கைகள் எப்படிப்பட்டது என்று சோதித்துப்பார்ப்பது மிக அவசியமாகிறது.

நம்முடைய விசுவாசம்

**"மகா பரிசுத்த விசுவாசமா"?**

அல்லது வெறும் **"விசுவாசமா"?**

**நாம் கீழுள்ள காரியங்களைக்குறித்து எப்படிப்பட்ட விசுவாசம் கொண்டிருக்கிறோம்....**

## ஆத்துமாவும் அதைக்குறித்த உபதேசங்களும்

**ஆத்துமா என்றால் என்ன?**

**ஆத்துமா அழியாததா?**

**அது மரிக்குமா?**

**எல்லா மதங்களும் போதித்துவரும் ஆத்துமாவைப் பற்றி வேதம் என்ன சொல்லுகிறது?**



## நரகம் என்றால் என்ன?

இந்துக்களுடைய எமலோகமும், வேதாகமத்தில் சொல்லப்படும் நரகமும் ஒன்றா?

நீங்கள் நரகத்தில் மரிக்க முடியுமா?

நரகத்தைப் பற்றின சத்தியம் என்ன?



## திரித்துவம்




திரித்துவமும், மூன்று தெய்வங்களும் ஒன்று என்ற “இரகசியத்தை” எப்படி புரிந்துகொள்வது?

தேவனைப்பற்றி ஒருவனும் அறியமுடியாதா?

இது ஒரு “தெய்வீக இரகசியமா?”



## அந்திக்கிறிஸ்து



யார் இந்த அந்திக்கிறிஸ்து?

அவன் தனிப்பட்ட நபரா?

## வேதாகமத்தின் காலக்கணக்கு

மனிதன் எத்தனை ஆண்டுகளாக இந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்?

இவை விஞ்ஞானிகள் கற்றுக்கொடுத்தபடி பல பில்லியன் ஆண்டுகள் உடையதா?



## எதிராளியான சாத்தான்



சாத்தான் –
மிக அசிங்கமானவனா?

அவன் அழியா வரம் பெற்றவனா?

அவன் மரிக்க முடியுமா?

அவனுக்குக் கொடுக்கப்பட்ட வல்லமை எப்படிப்பட்டது?



## ஆண்டவருடைய இரண்டாம் வருகை

நம்முடைய ஆண்டவர் எப்பொழுது வருவார் என்று யாருக்காவது தெரியுமா?

## சபை

**சபையும் அதிலுள்ள அநேக அமைப்புகளும் எப்படி வந்தது?**

**எல்லாரும் இயேசுவின் சபையின் அங்கத்தினர்களா?**

**அப்படியானால், கீழுள்ள வசனத்தில் உள்ளபடி அனைவருக்குள்ளும் ஒற்றுமை காணப்படாதிருக்கும் காரணம் என்ன?**

**எபேசியர் 4:6 “ஒரே சரீரம்”, “ஒரே ஞானஸ்நானம்”, “ஒரே அழைப்பு”**

## தேவனுடைய ராஜ்ஜியம்



**தேவனுடைய ராஜ்ஜியம் என்றால் என்ன?**

**இது உண்மையா?**

**இது பூமியில் ஸ்தாபிக்கப்படுமா?**

**அல்லது பரலோகத்தில் மட்டும் ஸ்தாபிக்கப்படுமா?**

....இன்னும் அநேக காரியங்கள் உள்ளது!!

இவைகளைப் பற்றிய நம்முடைய நம்பிக்கை தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் உள்ளதா?

“ஆம்” என்று பதில் சொல்வோம் என்றால்,

**நம்முடைய விசுவாசம் வெறும் விசுவாசம் மட்டுமா.. அல்லது “மகா பரிசுத்தமுள்ள விசுவாசமா”?**

இதை முதலில் நாம் நிச்சயித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், வசனத்தில் எழுதியிருக்கிறபடி....

## யூதா 20

**"....உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உறுதிப்படுத்திக்கொண்டு...."**

நாம் படிப்படியாக வேதத்தை அறியக்கூடிய ஞானத்திலும் அவர் மேல் வைக்கும் விசுவாசத்திலும் வளரவேண்டும் என்பதை இந்த வசனம் வலியுறுத்துகிறது.

வேதாகமத்தை கற்றுக்கொள்வதும், வேதத்தை அறியக்கூடிய ஞானத்தைப் பெறுவதும் தொடர்ச்சியான ஒரு செயலாகும். இதை மிக பொறுமையோடு நாம் மேற்கொள்ளவேண்டும்.

இதுவே நீங்கள் **"விசுவாசத்தில் உறுதிப்படுவதாகும்."**

இதைக் குறித்து நம்முடைய ஆண்டவர் நமக்கு கொடுக்கும் உறுதிமொழியை வாசிப்போம்....

## யோவான் 8:32

**"சத்தியத்தையும் (தேவனுடைய வார்த்தை) அறிவீர்கள், சத்தியம் (தேவனுடைய வார்த்தை) உங்களை விடுதலையாக்கும்"**

இந்த சத்தியம் என்ற தேவனுடைய வார்த்தைகள், தவறுகளில் இருந்தும், மூட நம்பிக்கைகளில் இருந்தும், தவறான போதனைகளில் இருந்தும் நம்மை விடுவிக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தைகளையும், அதிலுள்ள அறிவையும் ஆசீர்வாதத்தையும் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம்....



## 2 தீமோத்தேயு 3:16,17

**"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும் நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."**

ஆம், வேத வசனிப்பும், ஞானமும் பின்வரும் காரியங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்..

**"நீதியைப் படிப்பித்தலுக்கு"**

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சரியான வழிகாட்டியாக நம்முடைய வாழ்க்கையின் நடத்தைகளுக்கும், ஜீவனுக்கும் உபயோகமுள்ளதாக இருக்கிறது.

**"உபதேசங்களுக்கு"**

சகல சத்தியங்களையும் அவைகளுடைய பாடங்களையும் வேதாகமத்தில் உள்ளபடி கற்றுக்கொள்ள உதவுகிறது.

**"கடிந்துகொள்ளுதலுக்கும்"**

தவறான நம்பிக்கைகளையும் குற்றங்களையும் வேதவசனத்தின் வெளிச்சத்தின் மூலமாக எடுத்துக்காட்டி, மாறுபாடான போதனைகளையும் உபதேசங்களையும் சுட்டிக்காட்டுகிறதாக இருக்கிறது.

**"சீர்த்திருத்தலுக்கும்"**

சத்தியத்தின்படி உண்மையான உபதேசங்களையும், காட்டக்கூடியதாக இருக்கிறது.

இவைகளை நாம் புரிந்துக்கொண்டபின்பு, நமக்கு ஒரு ஆச்சரியமான கேள்வி எழும்புகிறது.

**இந்த வேதாகமத்தின் அறிவும், மகா பரிசுத்தமுள்ள விசுவாசமும் இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் இவ்வளவு பலவீனமாக இருப்பதற்கு காரணம் என்ன?**

இதற்கான பதிலை நாம் வரக்கூடிய **"விசுவாசம், பாகம் - 2 ல்"** படிக்கலாம்.

கடைசியாக ஒரு கேள்வி..
உங்களுக்கு எது முக்கியமாக தோன்றுகிறது?

**வேத வசனிப்பா.... அல்லது ஜெபமா?**

**யூதா 20**

**"நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி..."**


பார்த்தீர்களா, வேதாகமத்தை கற்றுக்கொள்வதன் மூலம் கிடைக்கும் வேத அறிவுக்கு முதல் இடமும் பின்பு ஜெபத்திற்கு அடுத்த இடமும் கொடுக்கப்படுகிறது என்று இந்த வசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**ஆனால், இன்று இதன் வரிசை மாறியிருப்பதற்குக்காரணம் என்ன?**

**கிறிஸ்தவர்கள் வேதாகமத்தைக் கற்றுக்கொள்வதற்கு ஏன் முக்கியத்துவம் கொடுப்பதில்லை?**

நாம் மீண்டுமாக அடுத்த வகுப்பில் சந்தித்து இந்த கேள்விகளுக்கான பதிலைக் காணலாம்.

**....ஆமென்....**




For Private Circulation Only

NOT FOR SALE